# பாலியர்  நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௫ம் ௵. மாசி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை, ௨.

## பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவோர்க்குவிலை | | | | சி. க. |
| ஒரேமுறையில் ௰ | " | " | " | ௯ |
| ௨௰ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௰ | " | " | " | ௪௰ |
| ௱ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

## SUBSCRIPTIONS AND DONATIONS.

| | s. d. | | s. d. |
|---|---|---|---|
| 1864 | | Mr. Anton Francis | 2 6 |
| Mr Barnabas | 1 0 | " A G. Pulle | 1 6 |
| Punditeripo Y. C A. | 3 0 | " G. S. Nathaniel | 1 6 |
| 1865 | | " S. சின்னப்பமேஸ்திரி | 1 6 |
| Mr. Peter Tychius | 1 6 | " J B Lawrence | 1 0 |
| " R. தம்புசாமிப்பிள்ளை | 1 6 | " Daniel Hoshea | 1 6 |
| " V. சந்தன்மேஸ்திரி | 1 6 | " P. Joshua | 4 0 |
| " Philip Anton | 2 6 | Rev. J. Rendall | 7 6 |
| " M. Alacke | 2 6 | " W. W. Howland | 4 0 |

## அறிவித்தல்.

சென்ற வருஷத்துக்கு பாலியர்நேசனின் கையொப்பக்காரர் தங்கள் பணங்களைக் கூடியவளவு காலதாமதம்பண்ணாமல் அனுப்பிவைத்ததற்காக நன்றியறிதலான வந்தனஞ்சொல்லுகிறோம்.

இவ்வருஷமும் அப்படியே தங்கள் கையொப்பங்களைத் தவறின்றி மேஸ்தர். என். ஸ்திரோங் (Mr. N. Strong) என்பவருக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு, பத்திராதிபர்.

## சீனப் பிள்ளைகள்.

சீனதேசத்தார் துஷ்ட ஆவிகளுக்கு மிகவும் பயப்படுகிறார்கள் சிறு குழந்தைகள் மரிக்கும்பொழுது அவைகளைத்துஷ்ட ஆவிகள் எடுத்துக்கொண்டுபோகின்றனவென்றெண்ணுகிறார்கள் இறந்துபோன குழந்தைக்கு அடுத்தாப்போல் பிறக்குங் குழந்தையை மெத்த மானமாயெண்ணவில்லையென்பதைக் காட்டும்படி ஒரு பேரிடுவார்கள். அதினால் துஷ்ட ஆவிகள் அவைகளைப் பிடியாவென்றெண்ணுகிறார்கள்.

இங்கிலிஷ்காரர் தங்கள் குழந்தைகளை முழுக்காட்டி குளிப்பாட்டி வருவதுபோல சீனர்தங்கள்குழந்தைகளைச்செய்வதில்லை. முதல் வருஷத்தில் பிள்ளையின் உடம்பில் தண்ணீர் வார்ப்பது மோசத்தை விளைவிக்குமென்று பயந்து ஈரச்சீலையினாற் துடைப்பார்கள். குழந்தை ஒரு வருஷத்தின் கடைசியிற் பிறந்தால் மற்றவருஷந் துவங்கும்பொழுது இரண்டு வயதென்றெண்ணுவார்கள். குழந்தைக்கு ஏறக்குறைய ஒரு வயதாகும்பொழுது மூன்று வயதென்றெண்ணுவார்கள். அவைகள் எழும்பி நிற்கக்கூடிய பிராயம் வந்தவுடன் சில்லில்லாத வண்டிலைப்போல மூங்கிற்றடியால் ஒரு பெட்டியுண்டாக்கி அதற்குள் வைத்து அவைகளை விளையாடவிடுவார்கள். மாரிகாலத்தில் இறுக்கமாக வைக்கோலால் மூடையப்பட்ட காழிகையறியுங் கருவியாகிய கண்ணாடிக் கூபியைப்போலொத்த ஒரு பெட்டிக்குள் பிள்ளைகளை வைப்பார்கள். அப்பெட்டியின் மேலுங் கீழும் துவாரமிருக்கும். மேற்பெட்டியில் பிள்ளையை வைப்பார்கள். கீழ்ப்பெட்டியில் கணப்புச்சட்டி வைப்பார்கள். அதினாற் பிள்ளையின் காலுக்குச் சூடுண்டாகும். குழந்தைகள் கையிற் கிலுகிலுப்பைவைத்து விளையாடுவார்கள். ஒடியாடித்திரியுமட்டும் பால் மறக்கவிடார்கள். பால் மறந்ததின்மேற் புற்கைகொடுப்பார்கள். அவைகளின் தலைமயிரை அடிக்கடி சௌரம்பண்ணுவார்கள். ஒரு அங்குலம் அல்லது இரண்டு அங்குலம் நீளமாக மயிர் வளர்ந்திருந்தால் அதைப் பின்னிவைத்தக்கயிற்றால் அல்லது பட்டினாற் கட்டுவார்கள். சிறிது வேளைகளில் அக்கம்பக்கமாக இரு சடைகளைப் பின்னிவிடுவார்கள். அல்லது குல்லாக்களின் நடுவில் ஒரு துவாரஞ்செய்து அதற்குள் அவைகளின் சடைகளைவிடுவார்கள். பிள்ளைகள் தலையிலணியும்படிக்கான குல்லாக்களை பட்டுக்களினால் செய்து விசற்பகிறமுள்ள வர்ணங்களிட்டு சதங்கைகளைக்கோர்த்துத் தூக்கிச் சிங்காரித்து முகப்பிற் தங்கள் குலதேவதையின் சித்திரத்தைத் தீட்டுவார்கள். அந்தச்சித்திரம் தங்கள் பிள்ளைகளைச் சேதமின்றிக் காப்பாற்றுஞ்சத்தியுடையதென்று அவைகளின் மாதாமார் எண்ணுவார்கள். வெள்ளைவஸ்திரத்தைபிள்ளைகளுக்குத்தரிக்கமாட்டார்கள். பெற்றோர் முட்டுப்பட்டவர்களாகவிருந்தால் புகர்நிறமான பருத்தி வஸ்திரத்தை பிள்ளைகளுக்கு தரிப்பார்கள். உல்லாசமான பட்டு அல்லது சுத்துணிப்பட்டுக்களால் அவைகளை உடுத்துவதே பெற்றோரின் விருப்பம். அவைகளின் வெளி அங்கி பிற்பக்கத்திற் திறந்துவிடப்பட்ட நெடுஞ்சாய்கையாகவிருக்கும். சாய்கைக்குமேலே கழுத்துவரைக்கும் நீண்டகைச்சட்டையுள்ளகுறுகிய அங்கியை அணிவார்கள். கழுத்துப் பட்டையைச் சுற்றி சித்திரத்தையலினாற் செய்யப்பட்டு கலகலவென்ற ஒசையைப் பிறப்பிக்குஞ் சதங்கைகளை நிரைத்து இரத்தாம்பரம் அல்லது இருண்ட பச்சை அல்லது இந்திரநீல நிறமுள்ள வஸ்திரங்களைத் தரிப்பார்கள். மாரிகாலத்தில் சீனதேசத்தின் வடபக்கங்களில் தலையணையென்று சொல்லத்தக்கதாக அநேக வஸ்திரங்களை ஒருமிக்கச்சேர்த்து சேணம்போலத் தைத்து பிள்ளைகளுக்கு அணிவார்கள். அதினால் தங்கள் கைகளை நீட்டிமடக்கக்கூடாதபடி பிள்ளைகள் வருத்தமடையும். கோடைகாலத்தில் சிறு பிள்ளைகள் மெத்த அரிதாக வஸ்திரம் உடுப்பார்கள். பிள்ளைகளின் கழுத்தில்வெள்ளிச் சங்கிலிக் கோவையொன்று தூக்கி அதிலொரு நெடுக் துணிகட்டி முற்பக்கத்தை மூடும்படி அணிவார்கள்.

சீனப் பிள்ளைகள் எட்டு வயதாகும்போது பெரிய மனிதரைப்போல உடுத்துப் பள்ளிக்கூடங்களுக்குப் போவார்கள். அவர்கள் சூரியோதயத்துக்குப் போய் நெடுநேரமாகப் படித்து சூரியன் அஸ்தமித்தபின்மேல் வீட்டுக்குத் திரும்புவார்கள். சாப்பிடும்நேரந்தான் அவர்களுக்கு விட்டாற்றி. குறித்த நேரமட்டும் அவர்கள் படியாமல் பராக்குப்பார்த்துக்கொண்டு நித்திரைதூங்குவார்கள். சீனப்பிள்ளைகளை யாரும் பார்க்கவேண்டுமென்றுவிரும்பினால் பெற்றோர் அவர்களைக் கூப்பிட்டு முழங்காற்படியிடச்செய்து தலைகளை நிலத்தில் முட்டச் செய்து எழுந்துநிற்கும்படி செய்வார்கள். இரண்டு வயதாகமுன் பிள்ளைகளைக் கோவிலுக்குக் கொண்டுபோய்க் கையெடுத்துக் கும்பிடும்படி செய்வார்கள். பிள்ளைகள் சிறு பிராயமாயிருக்குங் காலத்தில் விவாகப் பொருத்தஞ்செய்து கொள்ளுவார்கள். சிறிது காலங்களில் மாமிமாரிடத்தில் பெண்பிள்ளைகள் போயிருந்து வேலைகளைப் பயிலுவார்கள்.

## வக்கணைதரித்தல்.

பெரும்பாலும் பிள்ளைகள் தங்கள் கூட்டாளிகளுக்கு அல்லது மற்றவர்களுக்கு பட்டந்தரிக்கிறார்கள். இது மிகவுங் கெட்ட பழக்கம். சற்புத்திரர் இப்படிச்செய்யார்கள். இந்த நேசனை வாசிக்கும்பிள்ளைகள் இப்பழக்கத்தைக்கற்றுக்கொள்ளாதபடிக்கும், வக்கணைதரிப்போர் விட்டு விடும்படிக்குமாக இவ்விடத்திலொரு உண்மையாக நடந்த சரித்திரத்தைச் சொல்லுகிறேன்.

மறுபேருடைய மனதைப் புண்படுத்தும்படிக்கான காரியங்களை நான் சொல்ல அல்லது செய்யப்படாதென்று இளமையில் நானொரு திஷ்டாந்திரத்தால் பெற்றுக்கொண்ட படிப்பினையை ஒருபொழுதும் மறந்துவிடமாட்டேனென்று ஒருவர் சொல்லுகிறார். அதென்னவெனிற் பள்ளிக்கூடத்திற் படிக்கும்பிள்ளைகளாகிய அனேகருடன் நானுங்கூடி ஒரு சனிக்கிழமை சாயந்தரத்தில் தெருவருகேநின்று விளையாடுகையில் அஞ்சல்வண்டில் அடுத்தசத்திரத்திற் சேரச் சனங்கள் அதை விட்டிறங்கினார்கள். பிள்ளைகள் வாடிக்கையாகச் செய்வதுபோலவே நானும் என் கூட்டாளிகளுமாக அதைப்பார்க்கும்படி போனோம். அனேகர் வண்டிலைவிட்டிறங்க ஒரு வயோதிபமான மனுஷன் மெத்த வருத்தப்பட்டு வண்டிலைவிட்டு நிலத்திலிறங்கி பாதமொரு பக்கமும் முழங்கால் பின்னொரு பக்கமுமாக அந்தசந்தக் கேடாக நடந்துபோவதைக் கண்டு அந்த நெட்டிக்காலனைப் பாருங்களென்று கைகொட்டமிட்டுச் சிரித்துச் சொன்னேன். அப்பொழுது அந்த மனுஷன் மிகவும் விசனப்பட்டுத் தன தலையைத் திருப்பிப் பார்த்தார். அவர் அவ்விதமாக வருத்தத்துடன் திரும்பிப் பார்த்த தன்மையை என் ஆயுளில் ம

நந்துவிடக்கூடாமல் எப்பொழுதும் என் ஞாபகத்திலிருக்கின்றது. நான் இப்படி வக்கணையாகப் பட்டந்தரித்ததின் பின் சற்றுநேரத்தால் நடுங்கவும் பிரமிக்கவுந் தக்கதாக எனது பிதா ஒரு மூலைக்கால்வந்து இந்த அந்நியனுடைய கையை அன்பாகப் பிடித்துக் குலுக்கிச் சற்றுத் தூரத்திலிருக்கும் எனது வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோனார். இதுகாரியத்தைக் கண்ட அன்று சாயந்தரம் விளையாட எனக்குப்பிரியமில்லை. அந்திச் சாப்பாட்டுக்கு நேரஞ்சென்றபொழுது அந்த மனுஷனுடைய முகத்தைக் காணும்படி மறைந்துகொள்ளவுங் கூடாதென்று கண்டு நடுக்கத்துடன் போனேன். அந்த அந்நியன் என்னை இன்னாரென்று மட்டிட்டுக்கொள்ளாததினால் மன அமைதலுஞ் சந்தோஷமுமுள்ளவனானேன். எனது பிதா என்னை அந்நியனுக்குக் காட்டி இவன்தான் நீர் இரட்சித்த பிள்ளையென்றார். அப்பொழுது அவ்வார்த்தைகள் அத்திரம்போற்பட்டு என் மனதைப் புண்ணாக்கின. நான் குழந்தையாக ஆற்றில் நீந்திப் பழகுங்காலத்தில் தாழ்ந்து சீவன்போக ஏதுவாயிருந்த தருவாயில் சுழியோடி என்னைத் தூக்கி இரட்சித்த ஒரு மனுஷனுக்கு அவ்வேளையிலுண்டான குளிரினால் வாதப்பிடிப்புண்டாய்ச் சப்பாணியாய்விட்டாரென்று பலமுறையும் என் பிதாச் சொல்லுவார். அவரே இவர். இவரையே நான் நொட்டிக்காலா என்று வக்கணைதரித்து என் தோழருடன் கெக்கட்டமிட்டுச் சிரித்துப் பரிகாசம்பண்ணினேன்

பிள்ளைகளே, இதுகாரியம் என் மனதைவிட்டு ஆறுதல் எடுப்பார்களெனில் அவர்களுக்கு என்னாலியன்றதெல்லாவற்றையுங் கொடுப்பேன். என்னைப்போல நீங்களும் இவ்வித சோதனைக்குள்ளாக வருகில் சன்னை நையாண்டித்தனங்களினால் யாதொரு நயம் வருவதில்லை. மறுபேருடைய மனதைப் புண்படுத்துவதேயன்றி வேறென்ன செய்கிறோம். உங்கள் வாணாட்காலமெல்லாம் உங்கள் மனதை அரிக்கும் ஒரு கூரிய ஆயுதம் உங்கள் இதயத்தில் கிடக்கும். அதை நான் நீக்கப் பிரயாசப்பட்டும் என்னால் முடியவில்லை. நீங்களும் மற்றவர்களுக்கு வக்கணை தரிப்பீர்களானால் உங்கள்பாடும் அப்படியேயிருக்கும்.

## கிறிஸ்து குழந்தைகளைச் சந்தித்தல்.

சேர்மனி (Germany) தேசத்தில் யுத்தம் நடந்த ஒருகாலத்தில் அநேக பிள்ளைகள் அநாதரானார்கள். வைமா (Weimar) என்ற கிராமத்தில் யுத்தத்தினால் தங்கள் தந்தைகளையும் துக்கம் துன்பம் முட்டுப்பாடு என்பவைகளினால் தங்கள் தாய்மாரையும் இழந்த அநாதபிள்ளைகளிருந்தார்கள். இவர்களில் அனேகர் ஆருடிகளும் குற்றவாளிகளுமானார்கள். யோவான் வால்க்கு (John Falk) என்பவர் இவர்களுக்காக ஒரு புகலிடமுண்டாக்கி இவ்வகைப்பட்டோரை அதிற் சேர்த்து கிறிஸ்த பழக்கங்களை அவர்களுக்குப் பயிற்றினார். அவர்கள் போசனம்பண்ணுங் காலங்களிற் தேவாசீர்வாதம் அவர்கள் கேட்கும்படியும் பயிற்றினார். ஒரு முறை ஒரு பையன் புசிக்குமுன் கர்த்தராகிய யேசுவே எங்களுடன் கூடவந்திருந்து நீர் எங்களுக்குக்கொடுத்த போசனத்தை ஆசீர்வதித்தருளுமென்று சொன்னவுடன் ஒரு சிறுவன் எழுந்து என் கர்த்தராகிய யேசு ஒருக்காலும் எங்களிடம் வரவில்லை? ஒவ்வொருநாளும் எங்களுடன் வந்திருக்கும்படி கேட்கிறோம். அவர் ஒருக்காலும் வருகிறதைக் காணவில்லையென்றான்.

அப்பொழுது தலைவன் அந்தப் பிள்ளையை நோக்கி பிள்ளையே நம்பு, அவர் வருவார். நாங்கள் கூப்பிடும்பொழுது அவர் வராமல்விடுவதில்லையென்றார். அவ்வேளையில் பிள்ளை நான் அவருக்கென்று ஒரு ஆசனம் இவ்விடத்தில் வைக்கிறேனென்றான். அப்படி அவன் சொல்ல உடனே கதவில் தட்டுக்கேட்டது. அது ஆரென்று பார்த்தபொழுது குளிரினால் விறைத்துவந்த ஒருவன் இராத்திரிக்குத் தங்கிப்போக இடந்தரவேண்டுமென்றுகேட்டான். அவனை அவர்கள் ஏற்று வெறுமையாகவிருந்த ஆசனத்திலுட்காரவைத்து ஒவ்வொருவரும் தங்கள் பாத்திரத்தை அவனுக்குக் கொடுக்கவிரும்பினார்கள். ஒருபிள்ளை என் கட்டில் இரண்டுபேர் படுக்கக்கூடாத சிறுக்கட்டிலாகவிருக்கிறதே நான் இவருக்கு எப்படி இடங்கொடுப்பேனென்று துக்கித்தான். யேசு வரவில்லையேயென்றசொன்ன சிறுவன் இதைப்பற்றிச் சற்றே முட்டுப்பட்டு யேசு வரக்கூடாததினால் இந்த வறிய மனுஷனை அனுப்பினாரா என்று சொல்ல ஆம் பிள்ளையே அதுதான் காரியம் வறியவர்களுக்கு அல்லது துன்பக்காரருக்கு அல்லது மறியற்காரருக்கு யேசுவின் நாமத்தில் நாம் கொடுக்கும் ஒவ்வொருதுண்டப்பமும் ஒவ்வொரு மிடறு தண்ணீரும் அவருக்குக் கொடுக்கிறதாய் முடிகின்றது. மிகவுஞ் சிறியரான என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்தீர்களோ அதை எனக்குச் செய்தீர்களென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று யேசுவானவர் சொல்லுகிறார்.



## யாழ்ப்பாடியும் கோணாய்களும்.

கென்றக்கி (Kentucky) நாட்டிலே முற்காலத்தில் கோணாய்கள் மிகுதி. நாட்டுமிருகங்கள் இவைகளினால் அதிகமாக நாசப்படுத்தப்பட்டன. பொழுது அஸ்தமிக்குமுன் வீடுசேராத கால்நடைப்பிரயாணிகள் பெரும்பாலும் மாரிகாலத்தில் கோணாய்க் கூட்டங்களுக்கு எதுவாவார்கள். ஒரு விவாகச்சடங்குக்கு யாழ் வாசிக்கும்படிக்காக டிக் (Dick) என்னும் பேருள்ள ஒரு காப்பிரிக் கின்னரனை விவாகவீட்டுக்காரர் அழைத்தார்கள். அக்காலம் மாரிகாலமுமாகவிருந்ததன்றி நிலத்தில் பனிக்கட்டிகளும் நிரம்பக்கிடந்தன. இவன் போகவேண்டியதூரமும் ஆறுமைலாகவிருந்தது.

அந்திநேரமானவுடன் டிக்கென்பவன் யாழைத் தன் கையிலெடுத்துக்கொண்டு கலியாணவீட்டுக்குப் போகப் புறப்பட்டான். அவன் நடந்து போகையில் பனிக்கட்டிகள் படபடென்று துண்டுதுண்டாய் முறிந்தன. நிலா உதயமானது. நட்சத்திரக் கூட்டங்கள் பளபளவென்ற ஒளியைக் கொடுத்தது. இவன் போகும் வழி ஒற்றடிப்பாதையாகவும் நெடுந்தூரத்துக்குச் சோலைகள் அடர்ந்த வனமுமாகவிருந்தது. வண்டில் முதலியவைகள் இப்பாதையால் செல்லமாட்டா.

விவாகநேரத்துக்கு பிந்திவிடப்படாதென்று டிக் அதி துரிதமாய் நடந்து நடுக்காட்டிற் செல்லுகையில் ஒரு கோணாய் ஊளையிட்டதைக் கேட்டான். ஒன்று ஊளையிட மற்றது அதின்பின் ஊளையிட இப்படியே ஒன்றின்பின்னொன்றாக தூரத்தில் ஊளையிட்டு வரவர சமீபத்தில் எல்லாம் கூடி ஊளையிட்டன. இவன் துரிதமாக நடந்துபோக இவனைச் சாடும்படிக்கு பக்கங்களிலுள்ள பற்றைகளுக்குள் கோணாய்கள் சரசரவென்று ஓடிவருவதையுங் கேட்டான்.

கோணாய்கள் மனுஷரைத் திடீரெனச் சாடாமல் காரியம் வாய்க்குமட்டும் பொறுத்துச் சருவும். கோணாய்களின் சரசரப்பை டிக்கென்பவன் கேட்டதினால் தனக்கு வரும் மோசத்துக்கு தப்பிக்கொள்ள வாய்ப்பானது. மிருகங்களுக்குப் பயந்து ஓடுவது தனக்கு மோசத்தை வருவிக்குமென்று அநுபவத்தால் டிக்கென்பவன் அறிந்தபடியால் ஓடாமல் அவைகள் நின்றவிடத்தில் நிற்கும்படியாக அவைகளை எதிர்முகமாகப் பார்த்துக்கொண்டு மெதுவாகப் பின்னிட்டு நடந்து காட்டைத் தாண்டி வெளிமேல் வந்தான். அந்த வெளியில் ஒருகுடிசையுண்டென்று நினைத்து அதைச் சேரும்படி தைரியங்கொண்டான்.

ஆனாற் கோணாய்கள் நெருங்கி அவன்மேற் சருவும்படி மொய்த்தன. அவைகளின் பச்சிலை நிறமுள்ள கண்களை அவன் பார்த்துத் தனக்கு மரணந்தான் நிசமென்று பயந்தான். ஒன்றின்பின்னொன்றாக அவன் காலடியிற் சமீபித்தபொழுது அவைகளை விலக்கும்படிக்கு தன் யாழ்க்கருவியால் குற்றினான். அப்படிக் குற்றுகையில் யாழின் நரம்புகள் சப்தித்தன. அதினால் கோணாய்கள் அச்சமுற்று பக்கத்திற் போனதைக் கண்டு திடாரிக்கங்கொண்டு யாழை எடுத்துவாசித்தான். உடனே கோணாய்கள் யாழ்நாதத்தைக் கேட்டவுடன் பின்னிட்டன. அதினால் அவன் கோணாய்களுக்குச் சற்றுத்தூரத்திலிருந்தான். இதுவே சமயமென்று அவன் கண்டு வெளியிலிருக்குங் குடிசைக்குத் துரிதமாயோடினான். ஓடுகையிலும் தன் கையால் யாழை வாசித்துக்கொண்டே ஓடினான்.

அப்படி அவன் ஓடுவதைக்கோணாய்கள் கண்டு திரும்பவும் அவனைத் தொடர்ந்தன. அவைகள் அவனுடைய குதிங்காலைக் கடிப்பதற்கு ஏதுவான சமயத்தில் குடிசையின் கடகடத்த கதவைத் தனக்குப் பின்னால் படாரெனத் தள்ளிவிட்டு வீட்டின் கூரைமேலேறினான். ஆனாற் கோணாய்கள் மிகவும் உக்கிரங்கொண்டு உட் குடிசைக்குட் புகுந்து சறுமியுறுமிக் கூவென்று தாழ்வாரத்தின் வரிச்சுகளுக்கூடாகத் தங்கள் மூஞ்சைகளை நீட்டி ஆரம்பித்தன. டிக்கென்பவன் தனதுகாலை அவைகள் கடியாதபடி செய்துகொண்டது மெத்தப்பிரயாசம். மறுபடியுந் தனது யாழை எடுத்து வாசித்தான். அப்பொழுது அவைகள் அமைதியாகநின்றன. தன் கை சலித்துப்போகும்படி யாழை வாசித்துத் தொய்ந்துபோனதால் அதைவிட்டுவிட்டால் மறுபடியுங் கோணாய்கள் உக்கிரமித்துத் தன்மேல் விளக்கூடுமென்று கண்டு திரும்பவும் வாசித்துக்கொண்டேயிருந்தான்.

வெகுநேரஞ்சென்றதால் டிக்கென்பவனைக் காணவில்லையென்று விவாகவீட்டுக்காரர் தேடிவந்தவேளையில் இவன் தனது பிராணன் தப்பும்படியாக வீட்டின் கூரையில்நின்று அவதிப்படுவதைக்கண்டு அவர்கள் அவனைச் சூழ்ந்திருந்த கோணாய்களைத் துரத்தி அவனுக்கு ஆறுதல்செய்தார்கள்.

## தனக்கு ஏற்ற நியாயம்.

ஒரு மனுஷன் ஒரு போத்தல் சாராயத்தைத் தனக்கு முன் வைத்துக்கொண்டு வெட்கமின்றிச் சொன்னதாவது, தேவன் உண்டாக்கின சமஸ்தமும் நல்லவை. ஆகையால் ஒன்றையும் நாம் தள்ளப்படாது அதை ஸதோத்திரிப்புடன் நாம் அநுபவிக்கவேண்டுமென்று சொல்லிச் சாராயமும் தேவனுடைய சிருட்டிகளிலொன்றென்றான். ஒரு கருத்தாக அது தேவனுடைய சிருட்டிப்புக்களிலொன்றுதான். அந்தக்கருத்தாகவே பாஷாணம், நச்செண்ணெய், நச்சுநீர்முதலியவைகளும் தேவனுடைய சிருட்டிப்புக்கள். இறந்த மனிதரின் தேகத்தை நாறிப்போகாமற் காப்பாற்றுவதற்குச் சாராயம் நல்ல உடைமை. ஆனால் உயிரோடிருக்கும் மனிதரின் தேகத்தைக் கெடுப்பதற்குச் சாராயத்தை விட உலகத்தில் வேறொன்றுமில்லை. இறந்தமனிதரின் தேகத்தைக் காப்பாற்றவேண்டுமெனில் சாராயத்துக்குள் போடு. உயிரோடிருக்கிற மனு

வுரைக்கொல்லவேண்டுமென்னில் சாராயத்தை அவர்களுக்குள் ஊற்று.

*பிள்ளைகளே, தேவன் உண்டாக்கின சமஸ்தமும் நலமாயிருந்தும் அந்தந்த இடத்துக்கும் நோக்கத்துக்கும் ஏற்றதேயன்றி மற்றும்படியல்ல. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவா? அமிர்தம் நஞ்சாகுமேயாகில் நஞ்சு என்னவாகும் என்பதைநீங்களே நிதானியுங்கள்.

## சீதோன்.

இது பெனிக்கேகோட்டிலுள்ள ஒரு பட்டினம். காணானுடைய சிரேஷ்ட புத்திரன் சீதோன் என்பவனின் மூலமாக இப்பட்டினத்துக்கு ஒருவேளை பேரிடப்பட்டதென்று எண்ணுகிறார்கள். காணான்தேசத்தில் வடமேற்குக் கோணத்தில் தீரவுக்கு உய அல்லது கூய மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கின்றது. இது ஆஷேர்கோத்திரத்தாருக்கு உரியதாயிருந்தது. ஆனால் அதில் இருந்த பூர்வகுடிகளை முற்றாக இஸ்ரவேலர் ஒருக்காலும் அகற்றவில்லை. ஆகையால் இஸ்ரவேலருக்கு அவர்கள் எப்பொழுதும் தொல்லையுண்டாக்குகிறவர்களாய் இருந்தார்கள். அது பெரியகடலின் ஓரத்தில் இருப்பதாலும் அத்தேசத்தின் மரங்கள உச்சிதமானவைகளாய் இருந்ததினாலும் சிறந்தவேலையாட்கள் இருந்ததினாலும் பலனும் விவேகமும் உள்ள வித்தைகளில் கெட்டிக்காரராக இருந்ததினாலும் அது ஒரு மேன்மையுள்ளதும் வியாபாரத்துக்குரியதுமான பட்டினமாய் இருந்தது. இதைப் பெரிய சீதோனென்றும் சொல்லுவார்கள். இப்பட்டினத்தைப் பற்றிய தீர்க்கதெரிசனங்களாவன. (ஏசாயா. உங: ச, யஅ. எரேமியா உரு: யஉ, கூஅ. எசேக்கியேல். உஅ: உக, உங.) பாபிலோனியர் எகிப்தியர் உரோமர் என்பவர்கள் ஒருவர்பின்னொருவராக இதைக்கீழ்ப்படுத்தி ஆண்டுவந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் உரோமைக்குப் போன சமையத்தில் சீதோனையுங் கண்டு போனார்.

தற்காலத்தில் அதன் துறைமுகம் மண்ணேறிட்டிருக்கிறது. வியாபாரம் மிகவுஞ் சொற்பமாய் நடக்கின்றது. பட்டினம் மிகவும் ஒழுங்கீனமாய்க் கட்டப்பட்டிருக்கின்றது.

## வேதவாக்கிற்கொண்டபத்திவைராக்கியம்

ஒரு துரைமகன் ஐறிஸ்பாஷையிலே வேதவாக்கியம் வைத்திருக்கிறார் என்று ஒரு நாட்டவன் கேள்விப்பட்டு அதைப் பார்க்கும்படி விரும்பி அத்துரைமகனைத் தயவுபண்ணி உமது புதியேற்பாட்டைச் சிறிதுநாளைக்கு இரவலாகக் கொடும் அதைப் பார்த்து எழுதிக்கொண்டு தருகிறேன் என்றான். அதற்குத் துரைமகன் சொன்னது வேறுபிரதி கிடைப்பது அரிது. நான் உன்னை நம்பி அதைத் தரவுங் கூடாது. இன்னும் இதை எழுதுவதற்கு உனக்குக் கடதாசி எங்கே என்றார். அதற்கு அவன் நான் விலைக்கு வாங்குவேன் என்றான். தூவலும் மையும் வேண்டுமே அதற்கு என்ன செய்வாய்? என்ச, அவைகளையும் நான் விலைக்கு வாங்குவேன் என்றான். நல்லது இதை வைத்து எழுத இடம் வேண்டுமே அதற்கு என்னசெய்யப்போகிறாய்? என்று துரைமகன் கேட்க, அவன் ஐயாவே தயவுபண்ணி நீர் உமது மண்டபத்தில் எனக்கு இடந்தந்தால் பகலில் என் வேலையைச் செய்துமுடித்ததின்மேல் இராக்காலத்தில் எழுதுவேன் என்றான். இவ்வகைப்பட்ட மறுமொழிகளைத் துரைமகன் கேட்டவுடன் மனதில் தாக்குண்டு அவன் தனது மண்டபத்தில் இருந்து எழுதும்படி இடங்கொடுத்ததுமன்றி விளக்குங் கொடுத்தார். அவன் தன் முயற்சியில் தளராமல் புதியேற்பாட்டை எழுதிமுடித்தான். இங்கிலாந்து முதலிய சருவதேச வேதசங்கத்தாரின் தலைவன் ஒரு அச்சிட்ட பிரதியைக் கொடுத்துக் கையெழுத்துப்பிரதியைவாங்கி இது ஐறிஸ்சாதியார் வேதவாக்கிற் கொண்டிருக்கும் பத்திவைராக்கியத்தைக் குறிக்கும் ஒரு ஞாபகக்குறியாக இருக்கட்டுமென்று வைத்துக்கொண்டார்.



அருமையான பிள்ளைகளே,

முன்போன பத்திரிகையில் இலீசா கேரீத் ஆற்றினிடத்திற் போஷிக்கப்பட்ட விதத்தையும், கைம்பெண்ணினால் ஆதரிக்கப்பட்டவிதத்தையுங் குறித்துச் சொன்னேன். இப்போ இலீசாவின் மீதியான சரித்திரத்தைக்குறித்து எழுதுகிறேன். இலீசா அந்தக் கைம்பெண்ணின் வீட்டிலிருக்கையிற்றானே அவளுடைய மகன் மரித்தான். அப்போ இலீசா அவன் நிமித்தந் தேவனைநோக்கிப் பிரார்த்திக்க அவன் உயிரடைந்தான். அப்பொழுது அந்த ஸ்திரீ, நீர் தேவனுடைய தாசனென்றும், உமதுவாயில் தோற்றும் யெகோவாவின் வார்த்தை சத்தியமென்றும் இதினால் அறிகிறேனென்றாள். கொஞ்சநாட் சென்றதின்மேல் இலீசா ஆகாபினிடத்திற் போனார். ஆகாப் பெரிய ஒரு இராசனானபடியால், இலீசா பயப்பட்டாரென்று எண்ணுவீர்களாக்கும். அல்லவே, இலீசா யெகோவாவின் தாசனானபடியால் ஆகாபுக்குப் பயப்படவில்லை, இலீசா துணிவோடே பேசி, இஸ்ரவேலர் எல்லோரையும், பாகாலின் தீர்க்கதரிசிகளில் எண்ணூற்றைம்பது பேரையும் ஒருமிக்கக்கூட்டி இரண்டு காளைகளைக் கொண்டுவரச்சொல்லி, முதல் அவர்கள் பாகாலைநோக்கிக் கூப்பிடும்படி சொன்னார். அவர்கள் காலைதுவக்கி மாலைவரைக்கும் தங்கள் தேவனாகிய பாகாலை நோக்கி ஓலமிட்டு எவ்வளவாய்க் கூப்பிட்டாலும் பாகாலோ உத்தரம் அருளவில்லை. அப்போ இலீசா தனக்குக் கிடைத்த காளையைத் துண்டமாக்கி விறகுகளின்மேல் வைத்து அதின்மேல் தண்ணீரும் ஊற்றுவித்து, அதைச்சூழவர வாய்க்காலை வெட்டி அதையுஞ் சலத்தால் நிரப்பினார். இப்படிச்செய்ததினமேல் அவர்களெல்லாருடைய சமுகத்திலும், தேவனைநோக்கிப் பிரார்த்திக்க, மேலே நீங்கள் இந்தப்படத்திற் காண்கிறபடி, உடனே வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவைகள் எல்லாவற்றையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த சலத்தையும் நக்கிப்போட்டது. எல்லாச் சனங்களும் அதைக் கண்டபொழுது, "யெகோவாவே தேவன், யெகோவாவே தேவன்" என்றார்கள். உடனே இலீசா, பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவரையுந் தப்பவிடாதபடி அவர்களைக் கீசோன் ஆற்றினிடத்தில் அழைத்துப் போய்க் கொன்றுபோட்டார். பிள்ளைகளே, இலீசா இப்படிச்செய்தபடியால் அவரைக்கொலைபாதகனென்று சொல்வீர்களாக்கும். இல்லை, இலீசா இப்படிச்செய்ததினாற் தேவனுடைய கட்டளையைக் கைக்கொண்டார். (உபாகமம். கங: ரு.) வசனத்தை எடுத்து வாசித்துப்பாருங்கள். பாகாலின் தீர்க்கதரிசிகள் கொலைசெய்யப்பட்டதின்மேல், இலீசா, கர்மேல் மலையின் உச்சியிலேறிப் பிரார்த்திக்க மூன்றுவருஷமும் ஆறுமாசமும் பெய்யாமலிருந்த மழை உடனே பெய்தது. இலீசாசெய்தயாவையும் ஆகாப்பின் மனைவியாகிய யெசபேல் கேள்விப்பட்டபோது, அவரைக்கொல்லத்தேடினாள்.

(இன்னும் வரும்.)

பிள்ளைகளே, இதினால் நாங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய காரியங்கள் சிலஉண்டு. இலீசா தெய்வகாரியத்தில் அதிக பத்திவைராக்கியமுள்ளவராயிருந்தார். இராசாவின் சமுகத்திலும், உண்மையான தேவவாக்கைக் கூறுவதில் பயப்படவில்லை. பாகாலின் தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்ததில், தான் யெகோவாவின் தொண்டனென்பதை வெளிப்படுத்தினார். இவ்விதமே நாங்களும், எங்கள் எங்கள் ஊழியத்தில் சாக்கிரதை உள்ளவர்களாய், உண்மையான இருதயத்துடனே தேவனைப் பின்பற்றி நடக்க வேண்டும். எங்களை மீட்ட அருமையான இரட்சகரை, பெரியோருடைய சமுகத்திலும் அறிக்கையிடுகிறதில் பின்னிற்கப்படாது. நீதியானின் விண்ணப்பம் மிகப்பெலனுள்ளது. அது வானத்தின் மதகுகளை அடைக்கவுந் திறக்கவுங்கூடியது.

## பொருத்தனைமீறுதல்.

சிறிதுகாலத்துக்கு முன் லொந்தன்பட்டினத்தில் குற்றேவல்செய்யும் வேலையைத்தேடி ஒருவறிய பிள்ளையாண்டான் அநேகர் இடத்தில் விண்ணப்பம்பண்ணினான். அப்படி அவன் விண்ணப்பம்பண்ணியுங் கிடையாததினால் தன் வீட்டுக்குத் திரும்பிப் போகுந் தறுவாயில் ஒரு துரைமகன் அவனுடைய மனநிலை முகக்குறிப்பினால் அறிந்து தன்னிடத்தில் வேலையாக்கினார். பிற்பாடு அவன் ஒருதொழிலைக் கற்றுக்கொள்ளும்படிக்காக அவர் பழக்கிவருகையில் அவன் தனது சாமார்த்தியத்தினாலும் கெட்டித்தனத்தினாலும் சகலராலும் புகழ்ந்து சொல்லப்பட்டான். அதன்பின் அந்தத்துரைமகன் அவனுக்குக் கொஞ்ச முதலைக் கொடுத்து தன்பாட்டில் வேலைநடப்பிக்கும்படி விட்டுவிட்டார். தனக்குக் கிடைத்த முதலையும் எடுத்துக்கொண்டு தனித்து ஒரு அறைக்குள்போயிருந்து தேவன் தனக்குச்செய்த அளவிறந்த நன்மைக்காக நன்றியறிதலைக் காண்பித்து தன் மனதில் தீர்மானித்ததாவது; தனக்குக் கிடைக்கும் வருமானத்தில் பத்தில் ஒருபங்கை வருஷந்தோறும் தேவதொண்டுக்குக் கொடுப்பேன் என்றான். முதல்வருஷத்தில் அவனுக்குக் கிடைத்த ஊதியத்தில் பத்துப்பவுனைச் சந்தோஷமாகக் கொடுத்தான். இவ்விதமாக அவன் கொடுத்துவர அவன் ஆதாயம் அதிகப்பட்டது. வருஷத்தில் ஐந்நூறு பவுண் கொடுக்கவேண்டிவந்த சமயத்தில் இந்தப் பெரிய தொகையைக் கொடுக்க மனதில்லாமல் ஏதும் கொடுப்போமென்று எண்ணினான். அப்படி எண்ணின அவ்வருஷத்திற்றானே அவனுடைய கப்பலும் பதினையாயிரம் பவுண் விலைபெற்ற கப்பற்சாமானும் புயலில் அகப்பட்டு மோசம் போய்விட்டது. அப்பொழுது அவன் திரும்பவும் கவலைப்பட்டுத் தான் முன்செய்த பொருத்தனையை மறுபடி புதிப்பித்து இனி ஒருக்காலும் தான் தவறிப்போவதில்லையென்று தீர்மானம்பண்ணி தான் கொடுக்கவேண்டிய பத்தில் ஒன்றை ஒழுங்காகக் கொடுத்துவந்தான். அவ்வேளையில் அவன் அதிகம் வர்த்தித்துவந்தான். திரும்பவும் அவன் உலகத்தாரோடு சேர்ந்து படிப்படியே இழுக்கப்பட்டுப்போனதினால் தான் கொடுக்கவேண்டிய கையொப்பத்தைக் கொடாமல் விட்டான். அதினால் இவன் வரவு வரவரக் குறைந்து முன் லொந்தன்பட்டினத்துக்கு குற்றேவல்செய்யும் வேலையை எவ்விதமாகத் தேடிவந்தானோ அவ்விதமான நிலைபரத்துக்குத் திரும்பவும் வந்தான்.

பிள்ளைகளே, இதின்படிப்பனை வெளியாக இருக்கின்றது. தேவனுக்கென்று நேர்ந்ததைக் கொடாமல் வைக்கிறவர் இம்மையிலும் வாழ்வடையமாட்டார். மறுமையிலும் சந்தோஷத்தை அனுபவிக்கமாட்டார்.

## கேள்விக்கு உத்தரம் கேள்வி.

விவேகமுள்ள ஒரு சிறு பிள்ளை ஒரு குருவானவர் இடத்திற் போனபொழுது குருவானவர் அந்தப் பிள்ளையை நோக்கி, தேவன் எவ்விடத்தில் இருக்கிறார் என்று நீ சொல்லுவாயாகில் உனக்கு ஒரு தோடம்பழம் தருவேன் என்றார். பிள்ளைகுருவானவரை நோக்கி, தேவன் இல்லாத இடத்தை நீர்சொல்லுவீராகில்உமக்கு இரண்டு தோடம்பழம் தருவேன் என்றான்.

## சத்தியவேதக்கேள்வி.

எம் பாடம்.

௯. ஆலயத்தின் பரிசுத்தத்துக்குப் பரிசுத்தமான ஸ்தலத்திலிருந்தவை என்ன?

மறு. உடன்படிக்கையின்பெட்டி யாத். ௨௫: ௰, ௨௧. அதற்குள் பத்துக்கற்பனை எழுதிய சாட்சிப்பத்திரம். ௧ இரா. ௮: ௯. சாட்சிப்பெட்டிக்குமுன் மன்னாவுள்ளபாத்திரம் யாத். ௰௬: ௩௨-௩௪. ஆரோனின்கோல் எண். ௰௭. ௰. உடன்படிக்கையின் பக்கத்தில் நியாயப்பிரமாணப்புஸ்தகம் உபாக. ௩௧: ௨௬. பவுலென்பவர் சொல்லுகிறபடி மன்னாவுள்ள பாத்திரமும் ஆரோனின் கோலும். எபி. ௯: ௪. இருந்தன.

௰. அர்த்தஸ்தலத்தில் ஆசாரியன் எத்தனைமுறை பிரவேசிப்பான்? லேவி. ௰௬: எண்ணா. ௨௯: ௮-௰௧. எபி. ௯:

௰௧. பரிசுத்தஸ்தானத்தின் புறம்பான வாசலில் என்ன இருந்தது? யாத். ௩௮: ௮, ௬.

௰௨. எவ்வித ஆவியுடன் சனங்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள்? யாத். ௩௫: ௨௧, ௨௨.

௰௩. தாவீதுகாணிக்கை செலுத்துவதைப்பற்றிச்சொல்லுவதென்ன? ௧ நாளா. ௨௯: ௰௪, ௰௭.

௰௪. எவ்விததன்மையுடன் கொடுப்பவர்களைத் தேவன் நேசிக்கிறார்? ௨ கொரி. ௯: ௭.

௰௫. நிவேதிக்கப்பட்டதில்ஒருபங்கைக்கொடாமல் வைத்தவர்களார்? அப்போ. ௫: ௧-௰.

௰௬. அவர்களுக்கு வந்த தண்டனை என்ன? அப்போ. ௫: ௧-௰

௰௭. கைம்மாறின்றிப் பெற்றுக்கொண்டவர்கள் எவ்விதமாகக் கொடுக்கவேண்டும்? மத். ௰: ௮.

## கடிதஉத்தரம்.

Mr. J. White என்பவர் அனுப்பிய கடிதம் வந்துசேர்ந்தது. அதைப் பார்வையிடுவோம்.

## தேவஸ்துதி.

ஆசிரியவிருத்தம்.

விண்ணுடன்கொதிவாரிசூழ்சகமளித்தாண்டு
வீட்டுமொரரிய பொருளாய்—விசுவாசரகமலரி
ல்வாசனுயெஞ்ஞான்றும் வியமிலாவடிவுடை
யொனுய்.

எண்ணரிய மண்ணவர்கள்ச்செக்கு மீசனுய்
இச்சைகைத்தற்றவனுமாய்—இருமூன்றுபான்யு
னவிறைவனுய் வாழ்வொனே இனனுங்குமற்ற
வனேயுன்

பண்பிசையசததோடியசமியமயனமிப் பா
ரோரெலாங்கூடியே-பகரினுமொவ்வொருவரா
ய்ப் பரதமதிலிம்பிபாகமுமுரைத்திடுவரோ.

நுண்ணறிவிலாதயானுகையாலனுவளவுநுவ
லதிறமில்லையறிவாய்நுவலேனபலசற்றுய்த்ததின்
றுறையேகண்ணேக்கயானண்டினேனே.

பின்முடுகுவெண்பா.

எறும்பிமுதலெறும்பீறுனபல்லுயிரின்
அரும்பசிக்கமுதிர்த்தாளும்—பரம்பொருளே
முத்திதருநின்னடியு முத்தமிழின் வாக்கியமுஞ்
சித்திக்கக்கைதொழுதேன்சிர்.

புத்தி.

பொய்யானகல்விகற்றுப் பொருளாசைகொள்ளாமன்
மெய்யானவோர்சடரைமேதினியி — லையாதேன்
உட்புலனலறிந்துயர்கதிக்கேகதற்
கட்புலனைத்தாட்டுவாய்கண்.

இப்படிக்கு, பாலியர்ப்பிறியராகிய
ம. ஸ. ஸ. சாராங்கோங்ரோட்டார் அவர்களின்
மாணுக்கனுகிய பிராஸ்பாசாரோட்டான்.

## நரியுங்காகமும்.

அண்டபிண்டசராசரங்களையும் படைத்துக் காத்து அழிக்க வல்லவராகிய பகவானருளோடு சற்சனராசிர்வாதமுநிறைந்தபாலியரே. யானிதனடியில் வரையுஞ் சிறியகதையையுங்கள் மேலான கருத்தாலாராய மிகக்கோருகிறேன். அஃதாவது,

புகழ்விக்கனென்னுமோர் நரியானது நறுமணம்வீசுமலர்களுள்ள ஓர் வனத்தில் உல்லாசமாயுலாவிக்கொண்டிருக்கையில் தனக்குள்ளே "இவ்வனத்தின் மெல்லிய பூவரும்புகள், அழகிய சிறைகளையுடைய வண்டினங்களால், துவைக்கப்பட்டலர்ந்து அதுகளிலிருந்து பெருகியோடும் தேனுனது சமத கொடுக்கத்தை த்தணிக்கும், ஆனல் அரும்பசியை மாற்றுதற்கோ, பெடை, சேவல், தாரா, அல்லது காம் பொசிக்கக்கூடிய, எப்பதார்த்தமென்கிலுமின்றகப்படவில்லையே" என்றெண்ணிக்கொண்டிருக்கையில் அசமர்த்தனென்னுமோர்காகம் தனது சொண்டிலோர் பாலடைக்கட்டித் துண்டுடன் மரக்கொப்பிலிருக்கக் கண்டு எவ்விதத்திலும் அத்துண்டை அபகரித்துப் பொசிக்கவேண்டுமென்ற நோக்கமுடன், அம்மரத்தருகிற் சென்று, அக்காகத்தோடு சிலவார்த்தைகள்பேசத்துவங்கிற்று. எவ்வாறெனில், "ஆ! அ! அதிசயமே!! மட்டிட்டுரைக்கக் கூடாத அழகுற்ற சிருட்டியாயிருக்கிருய், இரவியைக் கண்டருண்டோடும் இருளும் அடைக்கலம்புகத்தக்க நிறத்தையுடைய பட்சியே நின் குரலோசையோ, மகுடி, மணி, மத்தளி, குழல், சிலம்பு, சங்கு, சல்லரி, மல்லரி, கின்னரி, வேணு, முதலாகிய வாத்தியக்கருவிகளின் இசையைத் தாட்டிவிடும், அவ்விசையின் சுவை கரும்பு, கதலி, பலா, மா, பால், தேன், முதலாகிய பதார்த்தங்களின் மதுரத்தைப் பழிக்கும், அவ்வினிமையான ஓசைச்செனது செவிப்புலனையாய்த் தப்பவித்திருக்கிறேன். ஆசீர்வதிக்கப்பட்ட பட்சியே, ஒருபாட்டுபாடவேண்டும்" என்றிச்சகம்பேசுகிறதைக்கேட்ட அசமர்த்தனென்றகாகம் வருநட்டத்தைச் சற்றுமறியாமல் "கா கா" வென்றொலிக்கவே சுவ்விருந்தத்துண்டுந் தாழப் பொத்தென்று விழுந்தது. உடனே புகழ்விக்கனென்னுநரி அதன்மீது தள்ளிப்பாய்ந்து காரியவெண்ணத்தை நிறைவேற்றியபின், அக்காகத்தைநோக்கி, ஓ! குருபப்பட்சியே போதும், போதும், நின்னறிவுக்கு மேலாகிய பாட்டை அடக்கு, அப்பாட்டால் என் பசியைமாத்திரந் தீர்த்தற்கும், நின்னறிவுக்கும் உத்தமமீய்வேனென்றேகிவிட்டது.

ஆ! அருமையும் பெருமையுந் தங்கிய பாலியரே, இவ்வற்பகதையால் அறிந்துகொள்வதியாது?

இதம்பேசி மோசஞ்செய்வோருக்கு விலகியிருக்கவேண்டுமென்பதல்லவோ? ஆம், ஆம், எச்சரிக்கையாயிருந்து உங்கள் அருமைநேசனுரைக்கும் விலைமதியா வார்த்தைகளைக் கேளுங்கள்; சீரடையலாம்.

இப்படிக்கு, பாலியர்ப்பிறியராகிய
ம. ஸ. ஸ. சாராங்கோகரோட்டார் அவர்களின்
மாணுக்கனுகிய பிராஸ்பாசாரோட்டான்.

## ஒருமாதாவின்பிரார்த்தனை.

சிலகாலங்களுக்கு முன் இந்தியாவுக்கு வியாபாரச் சரக்குகளைக் கப்பலிலேற்றிக்கொண்டுவந்த ஒரு வியாபாரி இந்துசமுத்திரத்தில் சாத்திராப்பிரகாரம் கள்ளக்கப்பற் கூட்டத்தாரால் கொலைசெய்யப்பட்டான். இருதிறத்தாருக்கும் உண்டுபட்ட சல்லியத்தில் கப்பற் கப்பித்தானும் கிலாசுகாரரிற் பலரும் மடிந்தார்கள். மிச்சக் கிலாசுகாரரைப் பிடித்து கூக்குரல்செய்யாதபடி வாய்க்குள் துணியையிட்டு திணித்து கால்களிற்றளையிட்டு கள்ளக்கப்பலுக்கு ஏற்றிக்கொண்டுபோகும்படி வள்ளங்களில் இறக்கினார்கள். கள்ளக்கப்பற் கூட்டத்தார் கப்பலின் உள்ளறைக்குள் இறங்கி அங்கே இருக்கப்பட்டவர்களைச் சங்கரிக்கவும் அவ்விடத்தில் இருக்குந் திரவியத்தைக் கொள்ளையிடவும் ஆரம்பித்தார்கள். அவர்கள் இறங்கிப்போகும் வழியின் பக்கவில் விண்ணப்பம்பண்ணும் ஓசையைக்கேட்டு முதலாளி தன் கூட்டாளிகளைப்பார்த்து வாயிலின் அருகே தரிக்கச்சொல்லி தான் சத்தங்கேட்ட இடத்திற்கு மெதுவாக அடிமேல் அடிவைத்துப்போனான். போய் அவ்விடத்தில் ஒருக்கணிப்பாயிருந்த கதவின் பக்கவில் நின்று எட்டிப்பார்த்தபோது ஒரு கையைமேலே உயர்த்தி மறுகையால் தனது சௌந்தரியமுள்ள பிள்ளையைக் கட்டிக்கொண்டு முழந்தாட்படியிட்டுநிற்கும் ஒருஸ்திரியைக் கண்டான். அவள் மிகுந்த அவாவுடனே மிகுந்த இரக்கமுள்ள தேவனே உமக்குச் சித்தமானல் இந்தப்பிள்ளையின் பிராணனைத் தப்புவியும் அப்படி உமக்குச் சித்தம் இல்லாதிருந்தால் சத்துராதிகளுடைய கையில் அகப்பட்டுப் பாவத்திலும் துன்மார்க்கத்திலும் பயின்று சீவிப்பதிலும் பார்க்க இப்பொழுதே சத்துருக்களினது கத்திக்கு இது இரையாகட்டுக்கும். இது அவர்களுடன் கூடி உமது திருநாமத்தை அவதூறுபண்ணிக் காலம்விடாமலும் நித்தியத்துக்குங் கெட்டுப்போகாமலும் இப்பொழுதே இதின் பிராணன் அழிந்துபோகட்டுமென்று மனவேதனையினுற் கதறி அழுது விண்ணப்பம்பண்ணின சத்தத்தைக் கேட்டான். சத்தம் ஓய்ந்தவுடனே கள்ளக்கப்பலின் முதலாளி நடந்த காரியத்தைக் கண்டு மனங்குழம்பி தான் சிறுபிள்ளையாக இருந்த காட்களில் தன்மாதா தனக்காகப் பண்ணிய பிரார்த்தனைகளையும் போதித்த நற்புத்திகளையும் நினைவுகூர்ந்து தனது தீயசெயலைச் செய்வதற்குப் பதிலாக தேவாவியானவர் அவனுடைய மனதை அத்திரம் போற்றுளைத்ததினுல் முழந்தாட்படியிட்டு தேவ இரக்கத்துக்காகக் கதறினுன். முதலாளி அந்தஸ்திரியைப் பார்த்து உங்களுக்கு நான் ஒரு தீங்கும் செய்யமாட்டேனென்று உறுதிபண்ணிப் பின்பு கப்பலின் மேற்றட்டில் வந்து முன் விலங்கிட்டிருந்த கிலாசுகாரரின் விலங்குகளைமுறித்து அவர்களைத் தங்கள் கப்பலின்மேலேறச்சொல்லித் தானும் தன்கப்பற்காரருமாகத் தங்கள் கப்பலுக்குச் சென்றார்கள்.

இதின்பிறகு இவன் தன்னைத்தானே இந்திய அரசாட்சியார்கையில் ஒப்புக்கொடுத்துக் காவலில் அடைக்கப்பட்டான். தான் செய்த குற்றங்களைப்பற்றி மிகுதியாக மனக்கவலையுடன் உணர்ந்ததினுல் காரியம் விளங்குவதற்கு முன் சுரங்கண்டு மரித்துவிட்டான். மரிப்பதற்கு முன் சென்ற வாணுட்காலத்தில் தான் செய்த குற்றங்களை உணர்ந்து சொல்லி மனமேர்மையாக அறிக்கையிட்டான். மரித்ததின்பின் தான் யேசுவுடன் இருப்பேனென்று முழுமனதுடன் நம்பினுன்.

இவ்விதமாகவே தேவபத்தியுள்ள ஒரு மாதாவின் பிரார்த்தனை கேட்கப்பட்டது. கெட்டுப்போன குமாரன் இரட்சிக்கப்பட்டான். பதினொராம்மணியிலும் தேவன் நம்மை இரட்சிக்கத் திருவுளங்கொள்ளுகிருர்.

## புகைபொன்னனது.

ஒருவன் தான் நாடோறும் குடிக்கிற புகையிலையைவிட்டு அதற்குக் கொடுக்குங் கிரயத்தைவாரந்தோறும் ஒரு இடத்தில் வைத்து ஒருவருஷமுடிவில் கணக்கிட்டுப் பார்த்தபொழுது புதினத்தாள்களை விலைக்குவாங்கி வாசிக்கத்தக்க பணத்தைக் கண்டு, ஓ! புகைகட்டியாய்விட்டதென்றுன். அப்பொழுது அடுக்க நின்ற அவனுடைய சிநேகிதன் என்ன! இரும்பு முதலிய பதார்த்தங்களைப் பொன்னுக்கும் இரசவாதம் கற்றுவிட்டாயா? என்றுன். அதற்கு அவன் அப்படியல்ல புகையை நான் பொன்னுக்கவில்லை. ஆனுற் பொன் புகையாகாதபடி செய்தேனென்றுன்.

பிள்ளைகளே தான் குடிக்கும் புகையிலையை ஒறுத்ததினுல் அறிவிற்றேறுவதற்கும், நூதனங்களை அறிவதற்கும், ஒருவழியைக்கண்டீர்களே. நீங்கள் புகைத்தெறியும் பொருளின் விலையை ஓரிடத்தில் போட்டுவைத்தால் ஒவ்வொரு பிள்ளையும் எத்தனைபாலியர்நேசன் வாங்கத் தகுதியுள்ளவர்களாக இருப்பீர்கள் என்பதைச் சற்றே மனதிலுறுத்திப் பாருங்கள்.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.